**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.412 நாள்: 21.08.2026

**வடகிழக்குப் பருவமழை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

வடகிழக்குப் பருவமழை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்வாய்கள், வண்டல் வடிகட்டித் தொட்டிகள், ஏரிகள் மற்றும் குளங்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, இன்று (21.08.2026) வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு-61க்குட்பட்ட எழும்பூர் நெடுஞ்சாலையில் உள்ள வண்டல் வடிகட்டித் தொட்டியில் இருந்து வண்டல்கள் அகற்றும் பணி, அப்பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் சீரமைப்புப் பணி, வார்டு-59க்குட்பட்ட வாலாஜா சாலையில் உள்ள மழைநீர் வடிகாலில் இருந்து வண்டல்கள் அகற்றும் பணி, உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, மீதமுள்ள மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகளிலும் தூர்வாரும் பணிகளை மேற்கொண்டு விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, வடக்கு வட்டார துணை ஆணையாளர் அவர்கள், இராயபுரம் மண்டலம், வார்டு-61க்குட்பட்ட எழும்பூர் நெடுஞ்சாலையின் மையத் தடுப்புகளில் உள்ள செடிகள் மற்றும் அப்பகுதியில் உள்ள ஒப்பனை அறை, வார்டு-61க்குட்பட்ட மேயர் சுந்தரம் ராவ் பூங்கா, வார்டு-63க்குட்பட்ட மார்கெட் சந்தில் மாநகராட்சி அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி, வார்டு-62க்குட்பட்ட மே தினப் பூங்கா, வார்டு-59க்குட்பட்ட டி.என்.பி.எஸ்.சி. சாலையில் உள்ள அம்மா உணவகம், அமைக்கப்பட்டு வரும் பிராட்வே பேருந்து நிலையம் கட்டுமானப் பணி, வார்டு-57க்குட்பட்ட ஸ்ரீராமலு பூங்கா உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பூங்காக்கள் மற்றும் ஒப்பனை அறைகளை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரித்திடவும், அம்மா உணவகத்தில் வழங்கப்படும் உணவு தரமாகவும், உணவுப் பொருட்களின் இருப்பு மற்றும் சமையலறையினைத் தூய்மையாகப் பராமரித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**